Website Link: prgi.gov.in

*No.TS/4/2020-Title (RNI)*

**Office of Registrar of Newspapers for India**
(M/o Information & Broadcasting)
9th Floor, Soochna Bhawan, CGO Complex,
Lodhi Road, New Delhi-110003.

Dated 08/09/2020

# NOTICE TO PUBLISHERS

**Subject: Title Verification Guidelines reg.**

The Title verification guidelines as amended on 08.09.2020 by the competent authority is attached. Following may kindly be noted:

(i) The amended guidelines will be effective from today (i.e. 08.09.2020), except for (ii) below

(ii) The *Clause 16(a)* of the guidelines shall be effective from 01st January 2021 or, if notified otherwise

(iii) The guidelines are now made available in Urdu, Gujarati, Marathi, Bengali, Odia, Assamese, Kannada, Telugu, Malayalam and Tamil languages, in addition to Hindi and English.

(Joyce Philip)
Asst. Press Registrar

எண்: No.TS/4/2020-Title(RNI)

இந்திய அரசு

இந்தியாவிற்கான செய்தித்தாள்கள் பதிவாளர் அலுவலகம் (தகவல் , ஒலிபரப்பு அமைச்சகம்)

9வது தளம், சூச்சனா பவன், சி ஜி ஓ வளாகம், லோதி சாலை, புதுதில்லி -110 003

**

**தேதி** : **செப்டம்பர்** 8, 2020

செய்தித்தாள்களுக்குப் பெயர்கள் சரிபார்ப்புக்கான வழிகாட்டுதல்கள்

(1) "பொதுச் செய்திகள் அல்லது பொதுச் செய்திகள் மீதான கருத்துக்கள் கொண்டிருக்கும் அச்சிடப்பட்ட எந்த சஞ்சிகைப்பணியும்" என்று விளக்கமளிக்கப்பட்டுள்ள 'செய்தித்தாள்கள் பதிவுக்கான அம்சங்கள்' பத்திரிகை மற்றும் புத்தகங்கள் பதிவுச்சட்டம், 1867-ல் உள்ளன

(2) செய்தித்தாள் ஒன்றை வெளியிட விரும்பும் எந்த நபரும் அந்த செய்தித்தாளின் உத்தேசப் பெயர்க**ளு**டன் குறிப்பிட்ட அதிகாரிக்கு உறுதி ஆவணத்தை**த்** தாக்கல் செய்ய வேண்டும். உத்தேச பெயர்,

அ) ஒரு மாநிலத்தில் எந்த

மொழியிலும் அதே அல்லது

அது போன்ற அல்லது

ஆ) **ஒட்டு**மொத்த இந்தியாவிலும்

இதே மொழியில் இதே

அல்லது இதையொத்த

பெயர் இருக்கவில்லை என்பதை பத்திரிகைப் பதிவாளரிடமிருந்து உறுதி செய்துகொண்ட பின் குறிப்பிட்ட அதிகாரி மேற்குறிப்பிட்ட உறுதி ஆவணப் பத்திரத்தை உறுதிப்படுத்துவார்.

(3) பெயர் சரிபார்ப்புக்கு விண்ணப்பிக்கும் முன் விண்ணப்பதாரர் ஆர்என்ஐ இணையதளத்தில் 'சரிபார்க்கப்பட்ட பெயர்கள் / பெயர் தேடல்' என்ற இணைப்பில் உள்ள சரிபார்க்கப்பட்ட பெயர்களின் விரிவான பட்டியலை சோதித்துப் பார்த்துக் கொள்வதோடு ஆர்என்ஐ ஏற்கனவே சரிபார்த்த இதே அல்லது இதே போன்றதாக உத்தேசப் பெயர்கள் இல்லை என்பதை உறுதி செய்யவேண்டும். ஆர்என்ஐ இணையப்பக்கத்தில் ஏற்கனவே சரிபார்க்கப்பட்டப் பெயர்களின் பட்டியலில் இல்லாத பெயர்கள் கட்டாயம் ஏற்கப்படும் என்று அர்த்தமாகாது. ஒரு பெயரை ஏற்பதும் நிராகரிப்பதும் இறுதி அதிகாரியான பத்திரிகைப் பதிவாளர் முடிவைப் பொறுத்ததாகும்.

(4) செய்தித்தாள்கள் / பருவ இதழ்களின் பெயர் சரிபார்ப்புக்கு இணையதளம் வழியாக மட்டுமே சமர்ப்பிக்க வேண்டிய விண்ணப்பப்படிவம் (இணைக்கப்பட்டுள்ள வடிவத்தில்) http://www.rni.nic.in என்ற ஆர்என்ஐ இணையப் பக்கத்தில் உள்ளது. இதன் அச்சிடப்பட்ட படிவம் குறிப்பிட்ட அதிகாரி மூலம் (மாவட்ட மாஜிஸ்ட்ரேட் /சம்மந்தப்பட்ட மாவட்டத்தின் நிர்வாக மாஜிஸ்ட்ரேட்) ஆர்என்ஐ க்கு அனுப்பப்படவேண்டும்.

(5) பெயருக்கான விண்ணப்பத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் விண்ணப்பத்தை அனுப்பும் குறிப்பிட்ட அதிகாரியின் முத்திரையும், கையெழுத்தும், தெளிவாகவும் படிக்க முடிவதாகவும் இருக்க வேண்டும்.

(6) மாவட்ட மாஜிஸ்ட்ரேட் / குறிப்பிட்ட அதிகாரியால் அனுப்பப்படும் பெயருக்கான விண்ணப்பத்தின் மூலப்படிவங்கள் மட்டுமே பெயர் சரிபார்ப்புக்கு ஆர்என்ஐ இல் பரிசீலிக்கப்படும். நகல்கள் பரிசீலிக்கப்படமாட்டாது. மாற்றம் செய்தல் அல்லது வெள்ளை மை அழிப்பான் பயன்படுத்துதல் அல்லது அடித்தல் / திருத்தி எழுதுதல் என்பவை பெயருக்கான விண்ணப்பத்தில் அனுமதிக்கப்படமாட்டாது.

(7) ஒரு விண்ணப்பத்தில் ஒன்றுக்கும் அதிகமான மொழி குறிப்பிடப்பட்டிருந்தால் அந்த விண்ணப்பம் இரு மொழி / பல மொழி செய்தித்தாளாகக் கருதப்பட்டு அதற்கேற்ப சரிபார்க்கப்படும்.

(8) ஒரு செய்தித்தாள் அல்லது வெளியீடு ஒரு மொழியிலும் இருக்கலாம், இரு மொழி அல்லது பல மொழியிலும் இருக்கலாம். அந்த வெளியீடு இரு மொழி அல்லது பல மொழியாக இருக்கும் போது அதில் இடம்பெறும் செய்திகள் / கட்டுரைகள் சரிப்பார்க்கப்பட்ட பெயரில் குறிப்பிடப்பட்டிருக்கும் அனைத்து

மொழிகளிலும் இருக்க வேண்டும். பல்வேறு மொழிகளில் தனியாக வெளியீடு கொண்டு வரப்பட்டால் ஒவ்வொரு வெளியீட்டிருக்கும் தனியான விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டும்.

(9) தற்போதுள்ள வெளியீட்டின் புதிய பதிப்பு அதே மாநிலத்தில் அதே மொழியில் இன்னொரு மாவட்டத்திலிருந்து கொண்டு வரப்பட்டால் முன்கூட்டியே பெயர் சரிபார்ப்பு தேவையில்லை. பதிவு எண் மற்றும் சான்றிதழ் வழங்க பதிப்பாளர் நேரடியாக உறுதி ஆவணத்தைத் தாக்கல் செய்து, பிறகு தேவையான ஆவணங்களை ஆர்என்ஐ க்கு சமர்ப்பிக்கலாம். இருப்பினும், உத்தேசப் புதிய பதிப்பு வேறொரு மாநிலத்திலிருந்து அல்லது வேறுபட்ட மொழியில் (அதே அல்லது மற்றொரு மாநிலத்தில் வந்தால் முன்கூட்டியே பெயர் சரிபார்ப்பு அவசியமாகும்.

(10) ஒரு விண்ணப்பதாரர் குறிப்பிட்ட மொழியில், மாநிலத்தில், பருவகாலத்தில் பெயர் ஒன்றை உடமையாகக் கொண்டிருந்தால் வேறொரு மொழியில், மாநிலத்தில், பருவத்தில் பெயரின் உடமையை உரிமை கோர முடியாது.

(11) ஏற்கெனவே உரிமை பெற்றுள்ள பெயர் சரிபார்ப்பு மற்றொரு மாநிலம், மொழி அல்லது பருவகாலம் என்பதாக இருந்தால் வழிகாட்டுதலில் உள்ள அம்சங்களுக்கு உட்பட்டதாகும்.

(12) ஆர்என்ஐ ஆவணங்களில் ஏற்கெனவே தங்களின் பெயரைப் பதிவு செய்துள்ள பதிப்பாளர்கள் இத்தகைய விண்ணப்பதாரர்களாக இருக்கும் பட்சத்தில் புதிய பெயர்/பெயர்களுக்கு விண்ணப்பிக்கும் முன் ஆர்என்ஐ அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட பதிப்புக்கான / பதிப்புகளுக்கான அண்மைக்கால ஆண்டறிக்கை முறையாகத் தாக்கல் செய்யப்பட்டதை உறுதி செய்யவேண்டும்.

(13) பெயர் சரிபார்ப்புக்கான விண்ணப்பங்கள் முழுமையாக பூர்த்தி செய்யப்படாமல் இருந்தால் நிராகரிப்புக்கு உரியவையாகும்.

(14) விண்ணப்பங்கள் பரிசீலனையில் பத்திரிகைப் பதிவாளரால் ஏற்கப்பட்டுள்ள பெயர் சரிபார்ப்புக்குரிய விரிவான விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :

அ) ஒரு மாநிலத்தி**லோ**, எந்த மொழியிலு**மோ** அதே அல்லது அதையொத்த பெயர் அல்லது அதே மொழியில் ஒட்டுமொத்த இந்தியாவில் அதே அல்லது அதையொத்த பெயர்**கள் இருந்தால் அது** சரிபார்க்கப்படமாட்டாது.

ஆ) வெளிநாட்டுப் பெயர் உரிமைதாரரால் செல்லத்தக்க உரிம ஒப்பந்தம் அளிக்கப்படாதவரை வெளிநாட்டு செய்தித்தாள் / சஞ்சிகைக்கு அதே அல்ல**து** அதையொத்த பெயர்கள் சரிபார்க்கப்படமாட்டாது.

இ) ஒரு விண்ணப்பதாரர் ஏற்கனவே அவருக்கு ஒதுக்கப்பட்ட பெயர் /பெயர்களைப் பதிவு செய்த பிறகே புதிய பெயர் / பெயர்களுக்கு விண்ணப்பிக்கலாம்.

ஈ) ஒரே நேரத்தில் மூன்றுக்கும் அதிகமான பெயர் விண்ணப்பங்களை விண்ணப்பதாரர்கள் சமர்ப்பிக்க முடியாது. ஒரு விண்ணப்பதாரரிடமிருந்து மூன்று விண்ணப்பங்களுக்கும் கூடுதலாக வரப்பெற்றால் மூன்று விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலிக்கப்பட்டு மற்றவை முற்றிலுமாக நிராகரிக்கப்படும்.

உ) கீழ்க்காணும் நிலைமைகள் தவிர முதலில் வந்தவருக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் பெயர்கள் சரிபார்க்கப்படும் :

(i) வெளிநாட்டுப் பெயருக்கு விண்ணப்பதாரர், தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்திடமிருந்து தடையில்லா சான்றிதழ் (என்ஓசி ) அளிக்கவேண்டிய நிலையில்

(ii) நீதிமன்றம் அல்லது ஏதாவது சட்டப்படியான அதிகார அமைப்புக்குக் கட்டுப்படும் உத்தரவு உள்ள நிலையிலும் இத்தகைய உத்தரவுக்கு எதிராக மேல்முறையீடு செய்வதில்லை என்ற முடிவு எடுக்கப்பட்ட நிலையிலும்

(iii) பத்திரிகை**ப்** பதிவாளரின் ஒப்புதலுடன் பிற பொதுநலன் சார்ந்த நிலையில்

ஊ) விண்ணப்பம் அளிக்கும் போது விண்ணப்பதாரரால் செய்யப்பட்ட எழுத்துப்பிழைகள் காரணமாகப் பெயர்கள் நிராகரிப்புக்கு ஆர்என்ஐ பொறுப்பாகாது

எ) பத்திரிகை மற்றும் புத்தகங்கள் பதிவு சட்டம், 1867 பிரிவு 1**இ**ன் கீழ் விவரிக்கப்பட்டுள்ளபடி தான் செய்தித்தாள்களையும், சஞ்சிகைகளையும் ஆர்என்ஐ பதிவுசெய்யும். விண்ணப்பதாரர்களின் கீழ்க்காணும் வகையிலான பெயர் சரிபார்ப்பு விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படமாட்டாது:

(i) செய்தி முகமைகள்

(ii) சிறப்பு**ச்** செய்தி முகமைகள்

(iii) செய்தி இணையதளங்கள்

(iv) செய்தி அலைவரிசைகள்

(v) டாட் காம் ,டாட் இன், இ-, ப்ளாக், போர்டல், பேஸ்புக், டுவிட்டர், ஆர்குட்,லிங்க்ட் இன், யூ டியூப், யாஹூ, கூகுள், விக்கிபீடியா, விக்கிலீக்ஸ் போன்ற பெயர்களைப் பயன்படுத்தத் தெரிவு செய்யும் பெயர் உள்ளிட்ட மின்னணு வகையிலான வெளியீடுகள்

15) உத்தேச செய்திதாள்களுக்குக் கீழ்க்காணும் வகையிலான பெயர்கள் பரிசீலிக்கப்படமாட்டாது :

(i) சம்மந்தப்பட்டவர்களுக்குத் தொடர்பு இருப்பதாக தவறாகப் புரிந்து கொள்ளும் வகையில் அரசுத்துறைகள், அரசு நிறுவனங்கள், வெளிநாட்டு அரசுகள், யுஎன், டபிள்யூஎச்ஓ, ஐஎல்ஓ போன்ற சர்வதேச அமைப்புகளின் பெயர்களைக் கொண்டதாகப் பத்திரிகையின் பெயர்கள் இருக்கக்கூடாது.

(ii) மத்திய/ மாநில அரசுகளின் அல்லது அதன் அமைப்புகளின் அல்லது உள்ளாட்சி அமைப்புகளின் மக்கள் நலத் திட்டங்களோடு தொடர்புடைய பெயர்கள்.

(iii) இத்தகைய பதிப்புகள் செய்திகள்/ கண்ணோட்டங்கள்/கட்டுரைகள் போன்றவற்றைக் கொண்டிருக்காது என்பதால் விளம்பரம்(ad/ advertisement), வரிவிளம்பரம்(classified), ஒப்பந்தப்புள்ளி(tender), மனைவணிகம்(real estate), நாட்காட்டி(calendar), பஞ்சாங்கம், திருமணத்தகவல் (matrimonial), யெல்லோபேஜஸ்/பேஜ், (பொதுவாக வெள்ளை, இளஞ்சிவப்பு உள்ளிட்ட நிறங்களின் முன்னொட்டுகள்), வழிகாட்டி(guide), நாட்குறிப்பு(diary), சுருக்கம்(gist), உண்மை ஏடு (fact sheet), அறிவிப்பு வெளியீடு(bulletin), துண்டறிக்கை(pamphlet), சிற்றேடு(brochure), ஊர் பெயர் குறிப்புநூல்(directory) போன்ற சொற்களைப் பயன்படுத்தும் பெயர்கள்.

(iv) சுருக்கக்குறியீடுகள் அல்லது முதலெழுத்துக்களைப் பயன்படுத்தி உருவாக்கப்படும் புதுச்சொல்: உதாரணம் B2B, A2Z போன்றவை.

(v) ஓவிய எழுத்துக்கள், வீடியோகிராம், அதிகார முத்திரைகள் (hallmarks), குறியீடுகள் (logos), கூட்டு இணைவெழுத்துக்கள் (monograms) உணர்ச்சிக் குறியீடுகள் (emojis) போன்ற குறியீடுகளும் அடையாளங்களும் எந்த வடிவத்திலும் பெயரில் பயன்படுத்தினால் சரிபார்க்கப்படமாட்டாது.

(vi) படங்கள் அல்லது குறியீடுகள் போன்று எழுத்துக்கள் அல்லாதவற்றைக் கொண்ட பெயர்கள்.

(Vii) அறிவுக்குப் பொருந்தாதாக, பொருளற்றதாக பூர்வாங்க ஆதாரம் இருக்கும் பெயர்கள் சரிபார்க்கப்படமாட்டாது. எண்கள் மற்றும் +, * போன்ற கணிதக் குறியீடுகளை எந்த வடிவத்திலும் பெயரில் பயன்படுத்தக்கூடாது. சப்தஹிக்

வீக்லி, சந்தியா ஈவினிங், டெய்லி டைனிக் நியூஸ் போன்றபொருளற்ற சொற்களின் இணைப்புள்ள பெயர்கள் சரிபார்க்கப்படமாட்டாது.

(Viii) சமயங்களுக்குப் புறம்பான விஷயங்களைக் கொண்டிருக்கும் பெயர்கள், பொதுமக்கள் உணர்வுகளுக்கு எதிரான, அருவருப்பு தரும் பெயர்கள் சரிபார்க்கப்படமாட்டாது.

(ix) குற்றம், ஊழல் போன்ற தவறாகப் பயன்படுத்த முடிகின்ற சொற்களோடு அல்லது எதிர்மறை பொருள் தரும் சொற்களோடு இருக்கும் பெயர்கள் சரிபார்க்கப்பட மாட்டாது.

(x) வேலைவாய்ப்பு போன்ற சொற்களைப் பயன்படுத்தும் பெயர்களோடு அமைப்புகள் / சங்கங்கள் / நிறுவனங்கள் /அறக்கட்டளைகள் மட்டுமே விண்ணப்பிக்கலாம். இத்தகைய பெயர்களுடன் தனி நபர் விண்ணப்பங்கள் சரிபார்க்கப்பட மாட்டாது.

(xi) சின்னம் மற்றும் பெயர் (முறையற்றப் பயன்பாடு தடுப்பு) சட்டம், 1950 க்கு மாறான பெயர்கள்.

(Xii) தேசிய சின்னத்தையோ, தேசியக் குறிக்கோளையோ, அதை ஒத்ததாகவோ மத்திய அரசு / மாநில அரசுகள் / உள்ளாட்சி அமைப்புகள் ஆகியவற்றுடன் தொடர்பிருப்பதாகத் தவறான கருத்தை உருவாக்கும் பெயர்கள் சரிபார்க்கப்பட மாட்டாது.

(xiii) 'போலீஸ்', 'பீரோ', 'புலனாய்வுத்துறை', 'விஜிலென்ஸ்', 'சிஐடி', போன்றவை துறை சம்மந்தப்பட்டதாக இருந்தால் தவிர, நாட்டின் இத்தகைய முறைப்படுத்தும் / அமலாக்க முகமைகளின் பெயரைப் பயன்படுத்தக்கூடாது.

(xiv) நாட்டின் தற்போதைய / முன்னாள் குடியரசுத் தலைவர், பிரதமர், பதிப்பு பதிவு செய்யப்பட்டுள்ள மாநிலத்தின் தற்போதைய ஆளுநர், முதலமைச்சர், தற்போதைய இந்தியத் தலைமை நீதிபதி, கணக்குத் தணிக்கைத் தலைமை அதிகாரி, தலைமைத் தேர்தல் ஆணையர் ஆகியோரின் பெயர்கள் இடம் பெறக்கூடாது.

(xv) தேசியத் தலைவர்களின் பெயர்கள் அல்லது பிரபலமான தேசியத் தலைவர்களின் பெயர்களைப் போன்ற பெயர்கள், அரசுத் தலைவர்கள், மத்திய, மாநில அரசுகளின் பிரமுகர்களின் பெயர்களைக் கொண்ட பத்திரிகைப் பெயர்கள் சரிபார்க்கப்பட மாட்டாது. இருப்பினும் அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளோடு சம்மந்தப்பட்ட அமைப்புகள் விண்ணப்பித்தால் அந்தப் பெயர்கள் பரிசீலிக்கப்படும்.

(xvi) தற்போது பதிவு செய்யப்பட்டுள்ள நாளேடுகளின் இணைப்பாக, தற்போதுள்ள பெயர்களின் இரண்டு அல்லது கூடுதல் இணைப்புள்ள பெயர்கள் அல்லது தற்போதுள்ள பெயரின் ஒரு பகுதி போதிய அளவு புதிய பெயர் என்பதை வேறுபடுத்தாத பெயர் சரிபார்க்கப்படமாட்டாது. தற்போதுள்ள

பெயரின் இரண்டு சொற்களுக்கிடையே ஒரு சொல் சேர்க்கப்பட்டால் குறிப்பிடத்தக்க வேறுபாடான பொருளைத் தராதபட்சத்தில் அது ஒரே மாதிரியானதாக கருதப்படும்.

(xvii) மொழி, வெளியாகும் இடம், பருவகாலம் என்பதற்கு அப்பால் தற்போதுள்ள பெயரின் சொற்கள் அதேபோல் அல்லது வேறுபட்ட முறையில் இருக்கும் பெயர்கள்.

(xviii) தற்போதுள்ள ஒரு பெயருக்கு முன்னொட்டாக / குணப்பெயராக / ஏ, ஆன், தி என்ற ஆங்கில சொற்கள் ,நகரம், மாநிலம், பருவகாலங்கள், மொழி தொடர்பான சொற்களைப் பகுதியாகவோ, விகுதியாகவோ கொண்டுள்ள பெயர்கள். (உதாரணங்கள் The, Times, Daily, Dainik, Weekly, V/Wartha, Aaj, Today, Express, News, Khabar, Samachar, Bulletin, Diary, India, National, Rashtriya etc. )

(xix) தற்போதுள்ள ஒரு பெயரில் உத்தேச பதிப்பின்மொழி அல்லது பருவகாலத்தைப் பகுதியாக அல்லது விகுதியாகக் கொண்டிருக்கும் பெயர்கள் சரிபார்க்கப்பட மாட்டாது.

(xx) போட்டித்தேர்வுகள் அல்லது பாடக்குறிப்புகள் / பயிற்சிக்குறிப்புகள் ஆகியவற்றை மட்டும் கொண்டுள்ள வெளியீடுகளின் பெயர்கள் சரிபார்க்கப்பட மாட்டாது.

(xxi) உத்தேசப் பெயரின் உச்சரிப்பு மாறுபட்டதாக இருந்தாலும் கூட ஒலிப்பு ஒற்றுமை காரணமாகத் தற்போதுள்ள பெயரை ஒத்ததாக உள்ள பெயர்கள் சரிபார்க்கப்பட மாட்டாது.

(16) விண்ணப்பதாரர்களின் வழிகாட்டுதலுக்கான பல வகை அறிவுறுத்தல்களும் அம்சங்களும்:

(அ) பெயர் சரிபார்ப்புத் தேதியிலிருந்து ஓராண்டு காலத்திற்குள் செய்தித்தாள்களின் பதிவாளர் (ஆர் என் ஐ)அலுவலகத்தில், உரிமையாளர் / பதிப்பாளர் பெயரை பதிவு செய்திருக்க வேண்டும். சரிப்பார்க்கப்பட்ட பெயர் ஓராண்டுக்குள் பதிவு செய்யப்படாவிட்டால் அது முடக்கப்பட்டு மற்ற விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்படும்.

(ஆ) பெயர் சரிபார்ப்பிற்கான விண்ணப்பம் பரிசீலிக்கப்படும் காலத்தில் இசைவு குறித்த கடிதம் டி/எல் அனுப்பப்பட்டிருந்தால் இத்தகைய கடிதத்திற்கு விண்ணப்பதாரர் 60 நாட்களுக்குள் பதில் அளித்திருக்க வேண்டும். குறிப்பிட்ட காலத்திற்குள் பதில் பெறப்படாவிட்டால் விண்ணப்பம் நிராகரிக்கப்படும். இத்தகைய சூழலில் அதிகாரம் அளிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட மாவட்ட மாஜிஸ்திரேட் மூலம் புதிய பெயர் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(இ) இசைவு குறித்த கடிதம் ஆர்என்ஐ இணையதளத்தில் உள்ளது. இசைவுக் கடிதம் பெறப்படாதது அதற்கு பதில் அளிப்பதற்கான தாமதத்திற்குரிய காரணமாகக் கருதப்படமாட்டாது.

(ஈ) ஏற்கனவே பெயர் உரிமை கொண்டுள்ளவர் முடக்கப்பட்ட பெயருக்கு உரிமை கோர முடியாது. முடக்கப்பட்ட பெயரின் சரிபார்ப்பு எந்த ஒரு விண்ணப்பதாரருக்கும் நடப்பிலுள்ள வழிகாட்டுதல் மற்றும் விதிகளின்படி நிர்ணயிக்கப்படும்

(உ) ஒரு முறை விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டால் அனுப்புவதற்குரிய அதிகாரி மூலம் புதிய விண்ணப்பத்தை விண்ணப்பதாரர் சமர்ப்பிக்கவேண்டும். அனுப்பும் அதிகாரியிடமிருந்து முறைப்படியான ஒப்புதல் இல்லாமல் விண்ணப்பதாரரிடமிருந்து பெயர் தெரிவுகளை ஆர்என்ஐ நேரடியாக சரிபார்க்காது.

(ஊ) சரிப்பார்க்கப்பட்ட பெயர் பதிவு செய்யப்படாவிட்டால் எழுத்துப் பூர்வமான காரணங்களைப் பதிவு செய்து அதனை ரத்து செய்யும் அதிகாரத்தைப் பத்திரிகைப் பதிவாளர் கொண்டுள்ளார்.

(எ) நடைமுறை சார்ந்த தாமதங்கள் அல்லது நிராகரிப்புகளைத் தவிர்க்க பெயர் சரிப்பார்ப்புக்கு சமர்ப்பிக்கும் போது வழிகாட்டுதல்களைக் கண்டிப்புடன் பின்பற்றுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

(ஏ) சஞ்சிகைகள் (Journals) வெளியீட்டுக்கான பெயர்கள் தனிநபர் பெயரில் சரிப்பார்க்கப்படமாட்டாது. சஞ்சிகைகள் என்பவை அமைப்புகள் / கல்வி நிறுவனங்கள் / சங்கங்கள் போன்றவற்றின் பெயரில் மட்டுமே சரிபார்க்கப்படும். பல்வேறு சஞ்சிகைகளிலிருந்து தெளிவாக வேறுபடுத்திக்காட்டுவதற்குப் பெயரின் முன்னால் சம்மந்தப்பட்ட நிறுவனம் / அமைப்பு / கம்பெனியின் பெயர் சேர்க்கப்பட வேண்டும்

(ஐ) செய்திகள் மற்றும் பொதுச்செய்திகள் மீதான கருத்து என்ற வகையில் வெளியீட்டின் உள்ளடக்கம் இல்லாவிட்டால் அல்லது பெயருக்காக விண்ணப்பித்த போது குறிப்பிட்ட தன்மைக்கும், உள்ளடக்கத்திற்கும் வெளியீட்டின் உள்ளடக்கம் பொருந்துவதாக இல்லாவிட்டால் பதிவு செய்வதற்கு முன் சரிபார்க்கப்பட்ட பெயர் ரத்து செய்வதற்கு உரியதாகும்.

(ஒ) அரசுத்துறை / அமைப்பு மூலம் ஒரு செய்தியேடு / பதிப்பு கொண்டு வர உத்தேசிக்கப்பட்டால் அத்தகைய பெயர் சரிபார்ப்பிற்கான விண்ணப்பம் சம்பந்தப்பட்ட துறைத்தலைவர் மூலம் அனுப்பப்பட வேண்டும். அவரது பெயரில் மட்டுமே பெயர் சரிபார்ப்பு இருக்கும்.

17) பொறுப்புத் துறப்பு : உத்தேச செய்தித்தாள் / பருவ இதழ்களின் பெயர் சரிபார்ப்பு என்பது பிஆர்பி சட்டம், 1867இன் கீழ் செய்தித்தாள்களின் பதிவாளரிடம் அந்த செய்தித்தாளைப் பதிவு செய்யும் நோக்கத்திற்காக மட்டும்தான். பெயர் ஒப்புதல் என்பதற்கு வணிகச்சின்னமாக / வணிகப்பெயராக / நிறுவனப் பெயராக ஒப்புதல் பெற்றதாகப் பொருளில்லை. இத்தகைய நோக்கங்களுக்குத் தேவையான ஒப்புதலை வணிகக்குறியீடு சட்டம், நிறுவனங்கள் சட்டம் போன்ற பொருத்தமான சட்டங்களின் கீழ்

பொருத்தமான அதிகாரிகளிடமிருந்து விண்ணப்பதாரர்கள் பெற வேண்டும். இது தொடர்பாக ஏதாவது பிரச்**சி**னை எழுந்தால் அது சம்மந்தப்பட்ட இரண்டு நபர்களுக்கு இடையேயான பிரச்**சி**னையாகவே இருக்கும். இதில் எந்த வகையிலும் இந்திய செய்திதாள்களின் பதிவாளர் ஒரு தரப்பினராக இருக்கமாட்டார்.

**